**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 17.07.2025**
**OS. No. 186/2021**
**வழக்கு சாட்சி PW.3– விஸ்வநாதன், த/பெ.சுப்ரமணி**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1) நான் விசைத்தறி தொழில் செய்து வருகிறேன். வாதி கேசவராஜீம் விசைத்தறி தொழில் தான் செய்து வருகிறார். நானும், வாதியும் நண்பர்கள் என்றால் சரிதான். வாதி கேசவராஜீம், அவரது அண்ணன் சண்முகமும் சேர்ந்து வாங்கிய வீடு தான் தாவா சொத்து என்றால் சரிதான். வாதி கேசவராஜீம், அவரது அண்ணன் சண்முகமும் பாகம் பிரித்து கொண்டார்களா என்றால் இல்லை. வாதியின் அண்ணன் சண்முகம் 2007 ம் வருடத்திலேயே பெங்களூர் சென்று விட்டார் என நான் சொல்லியுள்ள நிலையில், அவர் எப்போது இங்கு வந்தார் என்றால், அவர் அவ்வப்போது பெங்ளூரிலிருந்து வந்து செல்வார். வாதி அவரது அண்ணன் சண்முகத்திற்கு சவரச்சனை செய்ததாக நான் சொல்லியுள்ளது எந்த வருடம் என்றால் வருடம் நினைவில்லை. வாதி அவ்வாறு எவ்வித சவரச்சனையும் செய்யவில்லை என்றும், உண்மையில் அவ்வாறு செய்திருந்தால் நான் வருடத்தை குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல.

2) தாவா சொத்து சண்முகத்திற்கும், வாதிக்கும் சரிபாதி பாத்தியம் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் சரிபாதி பாத்தியமாக பிரித்து கீழும், மேலும் என இரு பகுதியையும் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் வாதியிடம் வீண் தகராறு செய்து, அவரது விட்டில் பொருட்களை எடுத்து தெருவில் வீசியதாக என் நிரூபண வாக்குமூலத்தில் நான் சொல்வது எந்த தேதி என்றால் தேதி நினைவில்லை. சுமார் 4 வருடத்திற்கு முன்பு நடந்தது. சண்முகம் எப்போது இறந்தார் எ ன்றால் வருடம் எனக்கு நினைவில்லை. நான் சொல்வது போல் மேறகண்டவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3) நான் தற்போது வசிப்பது காமராஜர் நகர் கம்போஸ்ட் ரோடு 2 வது தெரு ஆகும். தாவா சொத்து எங்கள் தெருவிற்கு அடுத்த வீதியில் உள்ளது. என் நிரூபண வாக்குமூலத்தில் மேல் தளத்தை சண்முகமும், கீழ் தளத்தை வாதியும் அனுபவித்து வந்ததாக நான் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், நான் வாதி என் நண்பர் என்பதால் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.